
# சுதந்திரன்
SUT'ANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
பங்குனி 22
ரபி. ஆகி. 23
ஞாயிறு (2-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 85
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60

# செல்வா பிறந்தநாள்! எமக்கோர் திருநாள்!!

தங்கமாமணித் தமிழ் ஈழத்தின் சிந்தை நிறைந்த தலைவனே!
எங்கள் வாழ்வில் ஒளியேற்ற இங்குவந்துதித்த பெரியோனே!
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு
பாழ்பட்டு நின்ற தமிழர்களை வாழ்விக்க வந்துதித்த ஈழத்து
காந்தியே!
வடக்கையும் கிழக்கையும் வளமார் மலையகத்தையும் இணைத்து
சிதறிக்கிடந்த தமிழர்களை ஒருதேசியஇனமாக்கிவைத்தவன்நீ
இந்து இஸ்லாமியன் கிறிஸ்தவன் என்ற பாகுபாடு ஒழித்து
இனத்தை இணைத்த ஈடிலாத் தலைவன் நீ!
சாதிவெறியை வேரோடழித்து சமதர்மம் காத்திட்ட
சரித்திரத் தலைவன் நீ!
அடிமைத்தனத்துள் மூழ்கி விடிவே தெரியாது
திகைத்து நின்ற ஈழத்தமிழனுக்கு
விடுதலைக்கு வழிகாட்டிய வீரத்திருமகன் நீ!
நெஞ்சில் உறுதியும் நேர்மைத்திறனும்
வஞ்சகமற்ற பிஞ்சு உள்ளமும்
வாய்மை தவறு நேர்மையும் கொண்டு
வரலாறு படைத்த பாட்டுடைத்தலைவன் நீ!
சுதந்திர ஈழம்—சுந்தரத் தமிழ் ஈழம்
எனும்பெரு இலட்சியம் எமக்குத்தந்தவன் நீ!
கூட்டணியெனும் கொள்கை அணியை
ஆக்கித்தந்திட்ட அன்புத் தலைவன் நீ!
கூட்டணி ஒரு கண்—கொள்கை மறுகண்
இருகண் தந்து இனத்தைக் காத்தாய்!
ஐயா செல்வா, அருந்தமிழ்த் தந்தாய்!
நாமுய்திடத் தோன்றினாய் மார்ச் முப்பதோடொன்றில்!
அந்நாள் எமக்குத் திருநாள் பெருநாள்!
எண்பதாண்டுமுன் நீ பிறந்திருக்காவிடின்,
இந்நாளில் இங்கு எம், இனம் இருந்திராது!
விழியாம் எங்கள் மொழியும் நாடும்
அனைத்தும் இழந்து அழிந்தொழிந்திருப்போம்!
காலம் தந்திட்ட ஒளி மாமணி நீ!
கடவுள் அனுப்பிய தியாகச் சுடர் நீ!
இந்நாளில் உன்னை வணங்கித் துதிப்போம்!
இறைவனுக்கு நாங்கள் நன்றி செலுத்துவோம்!
'சுதந்திரன்' என்னும் நீ தந்த இவ் வேடு
உன் வழி பிசகாமல்—நெறிதவறாமல்
இனத்தின் விடுதலைக் குரலாக நின்று
உன் மைந்தன் ஆணையில் நடப்பதுகண்டு
உன் உள்ளம் மகிழும் என்பதை அறிவேன்!
ஐந்து பிள்ளைகள் நீ பெற்றெடுத்தாய்!
ஆறுவதாக சுதந்திரனைப் பெற்றாய்!
நீ உருவாக்கிய உந்தன் பிள்ளைகள்
உந்தன் பாதையில் பயணம் செய்கின்றார்!
'அமிர்தலைமையில் தமிழ் ஈழம்' என்றாய்
அந்தக்கனவை நனவாக்க இன்று
ஆயிரமாயிரம் இலட்சிய வீரர்கள்
அயராதுழைக்கிறார்; விரைந்து பணியாற்றுகிறார்!
செல்வா உந்தன் சிந்தனை எமக்கு
என்றும் வழிகாட்டும்; விடுதலை கிட்டும்!
புனிதப் பயணம் மேற்கொள்ளும் எமக்கு
புனிதத்தலைவனே ஆசிவழங்கு!

—கோவை

## வீரசிங்கம் மண்டபத்தில் தந்தை செல்வா பிறந்த நாள் விழா!

மூதறிஞர் அமரர் தந்தை செல்வா அவர்களின் 81 வது பிறந்த நாள் விழா 31-3-78 வெள்ளிக்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தந்தை செல்வா அறங்காவல் குழு தலைவர் திரு. கே. நேசையா தலைமையில் நடைபெறுகிறது. இவ்விழாவில் திருவாளர்கள்:- அ. அமிர்தலிங்கம் பா.உ. மு. சிவசிதம்பரம் பா.உ, ஆகியோர் உட்பட கூட்டணி பா.உ.க்களும், திருவாளர்கள் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், முன்னாள் மூதவை உறுப்பினர் சு. நடராசா, திருமதி மங்கையற்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# எதிர்ப்பு இயக்கத்தை என்றைக்கும் நமது

# தமிழினம் கைவிடக்கூடாது!

## ஒற்றையாட்சியின்கீழ் இனவிடுதலை நிரந்தரமற்றது

## உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் பேசாத உண்மை ஊழியர்களே எமக்குத் தேவை!

தமிழீழத் தந்தை மூதறிஞர் அமரர் செல்வா அவர்களின் 80 வயது பூர்த்தி விழா 31-3-78ல் தமிழ் ஈழமடங்கும் கொண்டாடப்படுகிறது. 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது நமது ஔவை மூதாட்டியின் அறிவுரைவாகும். அந்த அடிப்படையில் தந்தை செல்வா அவர்கள் தமிழர் விடுதலை இயக்கத்துக்கும் இனத்துக்கும் தந்துவிட்டுச் சென்றிருக்கும் சில அறவுரைகளை இங்கு தொகுத்துத் தந்திருக்கிறோம்.

—ஆசிரியர்

"இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டுமென்னும் தனி நோக்கத்துடன் நாங்கள் கூடியிருக்கிறோம். இப்போதிருக்கும் நிலையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும். நமது காலத்தில் நமது கண்முன்னே எமது இலட்சியம் நிறைவேறுது போனாலும் பிற்கால சந்ததிக்காவது அந்தப்பாக்கியம் கிடைக்கட்டும். நமது பிள்ளை குட்டிகளாவது சுதந்திரப் பிரசைகளாக வாழட்டும். கடைசியில் எதைத்தான் நம்மால் சாதிக்க முடியாது போனாலும் போகட்டும்—விடுதலை ஆர்வம் கொண்டு எழுந்துள்ள இன்றைய யுவர்களை கைதூக்கி விடுவதில் நாம் உழைத்து மாளுவோம்.

சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பல வீனத்துக்கு காரணமாக இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது இயக்கமும் தோல்வியுறும், ஐரிஷ் தேசியவாதிகளைப்போல சுதந்திரத் தமிழ் அரசு நிறுவப்படும்வரை பதவி ஏற்கவே மாட்டோம் என்ற வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழியர்களே எமதுகட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும் உதட்டில் ஒரு நோக்கமுமாக யாம் இருத்தல் ஆகாது.

செல்வத்திற்குறைந்த எங்களுக்கு வலிமைபொருந்திய நண்பர்களும் இல்லை; நேர்மையும் மன உறுதியையுமே நாங்கள் ஆயுதங்களாகக் கொள்ள வேண்டும்.

இப்போதை அரசியல் திட்டத்தின் கீழ் சிங்கள மக்கள் தமிழ் பிரதிநிதிகள் எல்லோரையும் உதாசினம் செய்து அவர்களது உதவிஇல்லாமல் அரசாங்கத்தை நடத்தவும் அவர்களது விருப்பத்துக்கும் உணர்ச்சிக்கும் மாறுக சட்டங்களை ஒன்றன்பின் ஒன்ருக நிறைவேற்றவும் முடியுமென்பது இப்போது தெளிவாகிய பின்னர் தமிழ்பேசும் மக்களுக்கு இரண்டுவழிகளே உள்ளன.

ஒன்று — நிபந்தனையற்ற சரணாகதி; மற்றையது— தமிழ் பேசும் மக்களை அரசியல் உரிமையற்றவர்களாக்கும் இப்போதைய அரசியலமைப்பிலிருந்து மீட்பதற்காக ஒருஇயக்கத்தைநடத்துவதாகும். பிந்திக் கூறியவழி கடுமையானது. ஆனல் அதுவே வீரர்களுக்குரிய வழியாகும்.

—(1949 தமிழரசு கட்சி தொடக்க விழாவில்).


### நமது கடமை

"இவ்வியக்கத்தின் பணி செய்யும் ஊழியர்களாகிய நாம் நம் தலைமுறையிலேயே எமது கோரிக்கைகை கூடுமென்று விசுவாசிக்கிறோம். எம் தலைமுறையிற் கைகூடா விடினும் நாம் இப்போரை நடாத்தி, எமக்குப் பின்வரும் தலைமுறையின் கையிற் கொடுப்பது எமது கடன். எமக்குப்பின்னே அரும்பெரும் வீரர்களை எம் இனம்பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களை அணிவகுப்பவர்களாகவாகிலும் இருப்போமாக!"

—1951 தமிழரசுச் கட்சி மாநாட்டில்

### பிரதேசம் வேண்டும்

"ஒரு இனம் வாழ அதற்குத் தனது என்று ஒரு பிரதேசம் வேண்டும்; தன்னுடைய தனித்தன்மையோடு ஒரு தேசிய இனமாக ஒருஇனம்தலையெடுபபதற்கு பிரதேசம், அல்லது தாயகம் இல்லாமல் முடியாது, உறைவிடம் அவசியம் வேண்டும். உறைவிடம் இல்லாத நாடோடி இனம் நல்ல படியாக வாழ முடியாது"



### ஒற்றையாட்சியின் கீழ் இன விடுதலை நிரந்தரமற்றது

ஒற்றையாட்சியின் கீழ் கிடைக்கும் விடுதலையோ அதிகாரப்பரவலோ நிரந்தரமானதல்ல; இன்றைய நிலையை நாளை பதவிக்கு வரும் இன்னொரு அரசாங்கம் மாற்றி விடலாம். சிலவேளைகளில் முதலில் இணங்கிய அதே அரசாங்கமே பிணக்குற்றுத்தன் முடிவை மாற்றியமைத்துக் கொள்ளலாம். அதனால்தான் தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளும் சுயநிர்ணய உரிமை பெறவேண்டும் என்று நமது இயக்கம் வற்புறுத்தி வருகிறது.

—செல்வா

### தலைவர்கள் கொள்கை மாறினுலும் இயக்கம் அழியாது.

"இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பெறத் ... அவர்களுடைய தலைமையினுலோ ஒருபோதும் முடியாது. எந்த நாட்டினை எடுத்துக்கொண்டாலும் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு கொண்டு வெறறியீட்டியது ஒரு இயக்கமேயன்றி தனிப்பட்டதலைவர்கள் அல்ல. ஒரு இயக்கத்தின் தலைவர்களாக விளங்குபவாகள் ஒரு காலகட்டத்தில் கொள்கை பிறழ்ந்தோ— அல்லது இறப்பினுல் மறைந்தோ — அரசியலைத் துறந்தோ போகலாம். ஆனல் அதற்காக அந்த விடுதலை இயக்கம் தடைப்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. தமிழரசுத் தலைவர்கள் மாறலாம்—மறையலாம்; ஆனுல் எமது இயக்கம் தன் புனித லட்சியங்களுக்கான போராட்டதைை தொடர்ந்து நடத்தி வருமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### எதிர்ப்பு இயக்கத்தை என்றும் கைவிடாதீர்!

நாம் எங்கள் நல்வாழ்வுக்காக எதைச் செய்தாலும் சிங்களமக்கள் ஆத்திரமடைவார்களே என்று சும்மா இருந்தால் எமது இனம் பூண்டோடு அழியவேண்டியதுதான். உரிமைகள் தாமாக வரா. விடுதலை நம்மைத்தேடி வராது. நாம் அதை நாடிப்போகவேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். இன்றைய நிலையில் சிங்கள அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு மீண்டும் மீண்டும் தீமையே செய்துகொண்டுவருகிறது. அதனுல் தமிழினம்அரசாங்கத்துக்குத் தன் எதிர்ப்பை துலாம்பரமாகக் காட்ட வேண்டும். தொடர்ந்து காட்டியாக வேண்டும், விடாப்பிடியாகக் காட்டிக் கொண்டேயிருக்கவேண்டும்.

### எதிர்ப்பும் ஒருவகை ஒத்துழைப்பே!

நாம் சிறுபான்மையினராக இருக்கும் வரையில் பெரும்பான்மையினரை எதிர்த்து நிற்பதால் எமக்கு ஆகப்போகும் நன்மை ஒன்றுமில்லை யென்றும் ஒத்துழைப்பு நல்குவதால் மட்டுமே இலாபம் அடையலாம் எனறும் சொல்பவர்களுக்கு நாம் கூறுவது இதுதான். எங்களுடைய எதிர்ப்புக்கூட ஒருவகை ஒத்துழைப்பே அதாவது தீமை செய்பவர்களுக்கு அவர்கள் செய்யும் தீமையை எமது எதிர்ப்பு மூலம் சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த முயல்வது அசல் ஒத்துழைப்பே தவிர வேறொன்றுமில்லை;

### மாலை மரியாதை வேண்டாம்

நாங்கள் இன்று அடிமைகளாக இருக்கிறோம். எங்களுக்கு மாலை மரியாதை வேண்டியதில்லை, இதனல் எந்தவிதமான சந்தோஷத்தையும் நாம் அடையப்போவதில்லை, சுதந்திரம் அடைந்தபின்னர், நாம் மாலை மரியாதைகளால் சந்தோஷமடைவோம், அதுவரையில் எந்த விதமான மாலை மரியாதையும் எங்களுக்கு செய்ய வேண்டாம் என்று உங்கள் எல்லோரையும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

### சலுகைகளை எதிர்பார்க்காதீர்!

"தமிழர் விடுதலைக்கூட்டணி ஓர் வெறும் அரசியற் கட்சியல்ல— அது அடக்கியொடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலை இயக்கம், விடுதலை இயக்கத்திலே பங்கு பற்றுகிறவர்கள் ஒரு காலமும் ஆளப்படும் இனத்திடமிருந்து தபால் கந்தோரோ பாடசாலைகளோ இருந்து பெற்றுத் தமிழ் பேசும் மக்களுக்கு கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. விடுதலையே நமது நோக்கம் இனத்தின் வாழ்வுதான் எமது இலட்சியம்; தமிழ் பேசும் மக்களின் விடுதலைநிலைநாட்டப்பெறும் வரை நமது இயக்கம் தொடர்ந்து போராடும்,"

### யார் தமிழினத் துரோகிகள்

மட்டக் களப்பு தமிழ் பேசும் மக்கள் சுகத்துடனும் சந்தோஷத்துடனும் வாழ்வதையே யாழ்ப்பாண மக்கள் விரும்புகிறோம். மட்டக்களப்புத் தமிழன், யாழ்ப்பாணத் தமிழன் என்று வித்தியாசம் காட்டுபவர்கள் தமிழினத் துரோகிகள்

தமிழ் நாடு ஒன்று நிறுவப் படுமாயின், அதற்குத் தலைநகராக திருகோணமலையை வைப்போம், இதுவே நமது கட்சியின் உறுதியானமுடிவு.

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய நிர்ணய உரிமைக்கும் உச்சவரம்பா?

அன்பு நண்பா

'சுயநிர்ணய உரிமை' என்ற புனிதமான சொல் இன்றைக்கு பல முகாம்களிலிருந்தும், பல் வேறு கருத்துக் கொண்டோரிடமிருந்தும்; வெவ்வேறு அர்த்தங்களுடனும் தொனியுடனும உச்சரிக்கப்பட்டு வருவதை நான் அவதானித்துக் கொண்டு வருகிறேன்; நாடு கவனித்துக் கொண்டு வருகிறது!

தமிழ் ஈழத் தேசிய இனம் 1977 ஆடிப் பொதுத் தேர்தலில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், ஐயத்துக்கிடமின்றியும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தாம் வேண்டி நிற்பது ஒரு சுதந்திர இறைமையுள்ள தனித்தமிழ் ஈழமே என்பதை பகிரங்கமாக எடுத்துக் கூறிய பின்னர் — துயில் நீங்கியெழுந்த சிங்கள நாட்டு இடது சாரிகளும் மற்றையோரும் 'சுயநிர்ணய உரிமை' என்பதற்கு தம்மனம் போன போக்கில் புதுப்புது வியாக்கியனங்களும் வேடிக்கையான விளக்கங்களும் கொடுத்திட முற்பட்டிருக்கிருர்கள்.

'சுயநிர்ணய உரிமை' என்பதற்கு வெவ்வேறு வியாக்கியானங்களைக் கொடுத்து, தாமும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்பதாக ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி, தமிழ் மக்கள் எடுத்துள்ள மாற்ற முடியாத இறுதி முடிவிலிருந்து — அதாவது சுதந்திரத்தமிழ் ஈழம் என்ற நிலைப்பாட்டிலிருந்து—அவர்களை திசைதிருப்பிட ஒரு திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறதோ என்று கூட நான் ஐயுறுகிறேன்.

சோசலிச நாடுகளில் எல்லாம் ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் பிரிந்துபோகும் உரிமையுடன கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு; என்பதை தேசிய அரசுப் பேரவையில் முன்பு பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டிய போது —அதே உரிமைகளை நான் ஏன் உங்களுக்குத் தரமாட்டேன் என்று நினைக்கிறீர்கள்? என்று திரு. ஜே. ஆர். அப்போது பதிலளித்திருந்ததையும்—அதே ஜே. ஆர். தமது அதே திருவாயால், இந்நாட்டில் தமிழ் மக்களுக்கெனப் பாரம்பரியத்தாயகம்—பிரதேசமஒன்று உண்டு என்பதை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அதே தேசிய அரசுப் பேரவையில் சுயநிர்ணய உரிமைத்தத்துவத்தையே புதைகுழிக்கனுப்பும் முறையிலும் தமிழ் தேசிய இனத்தின தாயகத்தையே மறுதலிக்கும் வகையிலும் பேசியிருந்ததை நாம் மறந்துவிடவில்லை!

எதிர்க்கட்சித் தலைவருக்கு தாம் அளித்த உறுதிமொழியை கௌரவித்து தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அங்கீகரிப்பாரா? அங்கீகரிப்பாரென்றால் எந்த 'அளவு'க்கு அங்கிகரிபபார்? அல்லது தமிழ் சமுதாயத்துக்கு பட்டைநாமம் போடுவாரா? என்பதெல்லாம் அரசியலமைப்பு சட்டத்துக்கு அவரது அரசு கொண்டுவரப் போவதாக கூறிக்கொண்டிருக்கும் திருத்தங்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் தான் அம்பலத்துக்கு வரவிருக்கின்றன!

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நிலைமை இதுவென்றுல் — சிங்கள நாட்டு இடதுசாரிகள் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை பற்றி வெளியிடுகின்ற கருத்துக்களைப் பார்க்கும் போது மேலும்வேடிக்கையாகவும் விநோதமாகவும், வேதனை தருவதாகவுமே காணப்படுகிறது.

**"சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை ஏற்கிறோம், ஆனல் அதைஉபயோகித்து தமிழர்கள் பிரிவினை கேட்பதை எதிர்க்கிறோம்; பிரிவினைக்கு நாம் இடம் கொடுக்கமாட்டோம்; ஒற்றையாட்சி—ஏக இலங்கை —என்ற அமைப்பின் கீழ், சுயநிர்ணய உரிமை என்று உச்சரித்துக்கொண்டு 'பிரதேச சுயாட்சி'யுடன் தமிழ் மக்கள் திருப்தியடைய வேண்டும்"**

என்ற கருத்தை லெனினிச, மார்க்ஸிய கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இடதுசாரிகள் கூறிவருகின்றனர்.

ரஷிய சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி
சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி,
வாசுதேவ நாணயக்காராவின் கட்சி,
ஜனதா விமுக்தி பெரமுனே (சேகுவேரா)

என்பன போன்ற இடதுசாரி இயக்கங்கள் இதையேதான் திருப்பித்திருப்பிக் கூறிவருகின்றன; தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு உச்ச வரம்பு கட்டுகின்றன!

திருமணம் செய்திடத்துடிக்கின்ற இளைஞன் ஒருவனிடம், உனக்குத் திருமணம் செய்திட உரிமை உண்டுஎன்பதை ஏற்றுக்கொள்ளுகிறோம்; அதற்குரிய தகுதி உனக்குண்டென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம்; ஆனல் ஒரு நிபந்தனை; நீ நினைத்தபடி—உன் விருப்பப்படி—மணமகளை தேர்ந்தெடுத்திட முடியாது; அதற்கு கடைசிவரை விடமாட்டோம்; நாம் கொண்டுவந்து மணவறையில் இருத்துகிற பெண் — சொத்தியோ, முடமோ, ஊமையோ குருடோ அவளுடைய கழுத்திலேதான் நீ தாலி கட்ட வேண்டும் உன் எண்ணப்படி பெண்ணைத் தெரிந்துகொள்ள முடியாது என்று நிபந்தனை விதிப்பதுபோல அல்லவா இருக்கிறது ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு இடதுசாரிகள் போடவிரும்புகின்ற கடிவாளம்?

**நிபந்தனை விதித்து ஒப்புக் கொள்ளப்படுகின்ற சுயநிர்ணயஉரிமை, உண்மையில் சுயநிர்ணய உரிமையே அல்ல; அதுவும் ஒருவகை அடிமைத்தனமே! நிபந்தனையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை — அடிமைகளுக்கு எஜமான் ஏதோ இரங்கிக் காட்டுகின்ற சலுகையைப் போன்றதாகும்!**

அதாவது—சிங்கள ஆதிக்க உணர்விலிருந்தும் இன்னும் முற்றுக விடுபடாத காரணத்தாலேதான்—ஏதோ தமிழ் இனத்துக்கு பிச்சை போடுவதுபோல 'பிரதேச சுயாட்சி' என்ற அளவில் சுயநிர்ணய உரிமைக்கு ஒரு வரையறை விதிக்க சிங்கள நாட்டு இடதுசாரிகள் துடிதுடிக்கின்றனர்!

இல்லாவிடின்—1944ம் ஆண்டு தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், தேசிய இனம் என்ற முறையில் விரும்பினுல் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை தமிழ் தேசிய இனத்துக்கு உண்டென்பதையும் ஏற்றுக்கொண்ட கொம்யூனிஸ்டுகள் —முப்பதாண்டுகள் கழித்து இன்றைக்கு தமிழ் மக்கள் விரும்பினுல் பிரிந்துபோவதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை ஏற்றுக்கொள்ள— அங்கீகரித்திட மறுப்பதேன்? மறுப்பதுமட்டுமல்ல—அதை தாம் எதிர்ப்பதாக வேறு பிரகடனப்படுத்துவதேன்? சிங்கள தீவிரவாதிகளின் செல்வாக்குக்குள் கம்யூனிஸ்ட் கட்சி மூழ்கியதன் காரணமாக லெனினிச பாதையிலிருந்தே தடம் புரண்டதை நாம் இங்கே காண முடிகிறது.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பல நாடுகள்— பல தேசிய இனங்கள் பிரிந்து செல்ல விரும்பியபோது—அதை மாமேதை லெனின் ஆதரித்தார்; அனுசரணையாக இருந்தார்; இத்தகைய பிரிவினைப் போராட்டங்களை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவேண்டுமென்று அறிக்கை கூட கொடுத்தார்; ஆனல் மாமேதை லெனினுக்கு இருந்த இந்த கொள்கையுறுதி, லெனினைப் பின்பற்றுகிறதாக கூறுகிறவர்களுக்கு இங்கு காணுமே! இது வேதனைக்குரியதுதான்!

"தன்னுடைய வாழ்க்கையை தானே நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையை கொடுப்பதே ஒரு தேசிய இனத்துக்கு கொடுக்கப்படும் சுயநிர்ணய உரிமையாகும். அந்நாடு தன்னிச்சைப்படி தனக்குகந்த குடியரசை அமைத்துக்கொள்ளலாம்; இஷ்டப்பட்டால் கிரேட் ரஷியக் குடியரசுடன் சேர்ந்து ஒன்றுக இருக்கலாம்; இஷ்டப்படாவிட்டால் பிரிந்து தன்னிச்சைப்படியே நடந்துகொள்ளலாம்; நம்முடைய நாட்டின் நிர்வாகத்தைநாமே நிர்வகிக்கவேண்டும் என்று நாம் கேட்டும் அதே உரிமைதான் சுயநிர்ணய உரிமை; நீதியையும், சம அந்தஸ்தையும் அடிப்படையாகக் கொண்ட உரிமை!"

சோவியத் அரசு நிறுவப்பட்ட எட்டாவது நாள்—நவம்பர் 15ம்திகதி யன்று பிரகடனப் படுத்தப்பட்ட ரஷிய நாடுகளின் உரிமைப் பிரகடனம் "சுயநிர்ணய உரிமை" என்ற பதத்துக்கு மேற்கண்டவாறுக தெளிவான விளக்கம் தருகிறது. ஆனல், சோவியத்தை உச்சிமீது வைத்து இங்கு கொண்டாடுபவர்களோ அந்தப் பிரகடனத்தின் அடிப்படையில் தமிழ் தேசிய இனம் சுதந்திர ஈழம் கோருவதை ஏற்றிட முடியாதென கோரஸ் பாடுகின்றனர்! எதற்கும் சோவியத்தையும், லெனினையும் எடுத்துக்காட்டுகின்றவர்கள், சுயநிர்ணய உரிமை என்ற தத்துவத்தில் மட்டும் சோவியத் காட்டும் மேற்படி பாதையை—லெனின் வழியை ஏற்றிட தயங்குவது ஏன் என்பது தான் நமது கேள்வியாகும்!

எனினும் நண்பா, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையில் அவர்கள் எவ்வளவு தூரம் எம்மோடு ஒத்து இணங்கி வரமுடியுமோ அவ்வளவு தூரம் வரட்டும்; அந்த அளவுக்கு நமது நோக்கத்துக்கு வெற்றிதான்; அந்த அடிப்படையிலேதான் தமிழினத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கம்யூனிஸ்ட் மாநாட்டு தீர்மானத்தை வரவேற்றிருக்கிறுர்!

ஆனுல்—தமிழ் தேசிய இனத்தின் நிலை, நோக்கம் தெளிவானது; அதில் எந்தவிதமாற்றத்துக்கோ பின்வாங்குதலுக்கோ—மறு பரிசீலனைக்கோ இடம் கிடையாது. இழந்த தமது அரசுரிமையை—சுதந்திர இறைமையுள்ள மதபேதமற்ற ஒரு சோசலிச தமிழ் ஈழத் தனி நாட்டை—மீள அமைத்தே திருவது என்று அவர்கள் முடிவுசெய்து விட்டார்கள்!

## அரசியல் மடல்

இன்னும்சொல்லப் போனுல்—1977ஆடிப் பொதுத்தேர்தலையே ஒரு சர்வஜனவாக்கெடுப்பாகப் பிரகடனப் படுத்தி—தங்கள் சுயநிர்ணய உரிமையை பிரயோகித்து—ஒரு சுதந்திரத் தமிழ் ஈழ நாட்டை நிறுவுவது என்ற தமது விருப்பத்தை எதுவித சந்தேகத்துக்கும் குழப்பத்துக்கு மிடமின்றி தெரிவித்து விட்டார்கள்!

தமிழ்தேசிய இனத்தின் இந்த விருப்பத்தை—முடிந்த முடிபை—தெளிவான தீர்ப்பை மதித்து—அவர்களது அரசுரிமையை நிபந்தனை ஏதுமற்ற முறையில் சமாதானமாக அங்கீகரிப்பதே உண்மையான சோசலிசவாதிகளினதும், உண்மையான ஜனநாயக வாதிகளினதும் கடமையாகும்! ஆனுல் உயிர்களை பலி தந்து—கண்ணீரும் செந்நீரும் சிந்தி—தியாக வேள்வியில் குளித்தே—சுதந்திரம் என்ற புனிதப் பொருளை தமிழ் சமுதாயம் அடைய வேண்டும் என்பது தெய்வத்தின் சித்தமானுல் யாரோ அதை தடுத்திட வல்லார்?

எனவே மூதறிஞர் தந்தைசெல்வா அவர்களின் 81வது பிறந்தநாள் மார்ச் 31ம்திகதி வருகிற இச்சமயத்தில்—தந்தைசெல்வா உருவாக்கி வளர்த்துத் தந்துவிட்டுச் சென்ற இந்த விடுதலைத் தீயை அணையாது வளர்த்து, சுதந்திரத் தமிழ் ஈழம் என்ற புனித பூமியை சென்றடைய தந்தையின் நாமம் மீது ஆணையிட்டு, பயணத்தை தொடருவோம்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# அகதிகள் பிரச்சினை

1977 ஆவணியில் சிங்கள நாட்டில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான இனப்படுகொலைக்கு உள்ளாக்கப் பட்டு, உயிர்ப்பலி கொடுத்தும், சொத்து சுகங்களையும் வீடுவாசல்களையும் மற்றும் உடமைகளையும் பறிகொடுத்தும், நட்ட நடுவீதிகளுக்கு விரட்டப்பட்டு வெறுங்கையினராக அச்சமும் பீதியும் மிரட்டிட உயிர் தப்பினலே போதும் என்று தமிழ் ஈழம் நோக்கி ஓடி வந்த அகதிகள் பல்லாயிரக்கணக்கானோர்.

இப்படி, அகதிகளாக ஓடிவந்தவர்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களையே இதற்கு முன் கண்டறியாதவர்கள்—இங்கு சொந்த பந்தம் எதுவுமற்றவர்கள்—சிங்கள நாட்டிலேயே பல தலைமுறைகளாகவாழ்ந்தவர்கள் கணிசமான அளவில் இருந்தனர்.

இவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த இடங்களிலேயே இவர்களது உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளித்திட ஆளும் பொறுப்பிலிருப்போர் வக்கற்று வகையற்று இருந்த காரணத்தினலேயே இவர்கள் அகதிகளாக எப்படியும் உயிர் வாழ்ந்தால் போதும்என்ற நிலையில் கண்ணீரும் கம்பலையுமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை நோக்கி ஓடி வந்தனர்!

எனவே அரசின் ஆற்றலற்ற தன்மையால் — கையாலாகாத் தனத்தினல் — அகதிகளாக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களே தஞ்சம் என வந்தடைந்த தமிழ் அகதிகளுக்கு இங்கு சீரான மறுவாழ்வு அளித்து அவர்களை வாழ வைத்திட வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்தினுடையதே என்பதை எவரும் மறுத்திட முடியாது;

ஆனல் அரசாங்கம் என்ன செய்தது? நீங்கள் விட்டு விட்டு ஓடி வந்த பழைய இடங்களுக்கே மறுபடியும் செல்லுங்கள்; உங்களுக்கு எல்லா வசதியும் செய்து தருகிறோம்; எல்லாப் பாதுகாப்பும் செய்து தருகிறோம்; என்று ஆசைவார்த்தை கூறிப்பார்த்தது. ஆனல் பட்டதுன்பம் போதும்; படமுடியாதினித்துயரம் என்று ஓடிவந்த அகதிகள் பெரும்பாலோர் அரசின் பேச்சை நம்பி தெற்கே செல்ல மறுத்தனர்.

இதனல் வேறு வழியில்லையென்ற நிலையில் வேண்டா வெறுப்பாக சில ஆயிரம் பேருக்கு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் முடிக்குரிய விவசாய நிலங்களை வழங்கி அவர்களை அங்கு குடியேற்றுவதற்கு அரைகுறை மனத்துடன் முன்வந்தது!

புனர்வாழ்வு அமைத்துக்கொடுத்தல் என்பது வெறுமனே நிலம் வழங்கியவுடன் முடிவடைந்துவிடும் ஒரு விஷயமல்ல; அந்த நிலத்தில் அகதிகள் தமது வாழ்க்கையை கொண்டிழுக்கக்கூடியநிரந்தரமானதும், நிலைபரமானதுமான ஒரு கட்டத்தையடையுமட்டும் அகதிகளை பராமரிக்க வேண்டியதும், அவர்களது தேவைகளை நிறைவு செய்துகொடுப்பதும், அதிகாரத்தை தனது கையில் வைத்திருக்கும் அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும்!

ஆனல் அகதிகள் குடியேற்றப் பகுதிகளிலிருந்து வருகின்ற செய்திகள், அந்த மக்களது புனர் வாழ்வு விடயத்திலும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதிலும் அரசு அறவே அலட்சியம் காட்டி வேண்டா வெறுப்பாக இருப்பதையே படம் பிடித்துக் காட்டுகின்றன.

கோடிக்கணக்கான பணம், உதவியாகவும், பொருளாகவும், மருந்தாகவும் அகதிகள் மறுவாழ்வுக்கென வெளிநாடுகளால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டது; ஒன்பது கோடி ரூபா வரை அகதிகள் மறுவாழ்வுக்கு செலவிடப்பட்டதாக அரசு கணக்கு வேறு காட்டுகிறது!

ஆனல்—

விடுவமடுவில் நிலம் வழங்கப்பட்டு அரசினல் குடியேற்றப்பட்ட அகதிகளோ—

அன்றாடம் உணவுக்கு வழியில்லை!<br>
குடிதண்ணீருக்கு வழியில்லை!<br>
குடியிருக்க வீடமைத்துத்தரப்படவில்லை!<br>
வைத்திய சுகாதார வசதிசெய்துதரப்படவில்லை<br>
வறுமை வாட்டுகிறது!

இதன் காரணமாக இருமாதகாலத்தில்6 பேர் மரணமடைந்துள்ளனர் என்று கண்ணீர்க்கதைகளை அடுக்கடுக்காக கூறுகிருர்கள்! கேட்க நம் நெஞ்சம் வெடிக்கிறது;

இவ்வாறு தமிழ் அகதிகளை உதாசீனம் செய்து புறக்கணித்து அவர்களை துன்பத்துள் ஆழ்த்துவதன் மூலம்— அந்த மக்கள் தாமாகவே இங்கிருந்து பயனில்லையென்ற முடிவுக்கு வந்து, தமிழ் பகுதியை விட்டு. மீண்டும் சிங்கள நாட்டுக்கு திரும்பிச் செல்லட்டும் என்ற சதித்திட்டத்துடன் தான் அரசு இவ்வாறு நடந்துகொள்கிறதோ என்று சந்தேகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்!

அகதிகளுக்கு வேண்டிய தேவைகளை நிறைவுசெய்து —அவர்களது கண்ணீரைத் துடைத்து — அவர்கள் நிலையான வாழ்வை இங்கு அமைத்துக்கொள்ள சகல உதவிகளையும் தாமதமின்றி வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது! ஏனெனில் அகதிகள் உருவானதற்கே அரசின் ஆற்றலின்மையே காரணம்! எனவே அகதிகள் பிரச்சினையில் அரசு தன் அசமந்தப் போக்கை கைவிட்டு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இன்றேல், வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமிழர் விடுதலை இயக்கங்கள் இதை ஒரு சர்வதேசப்பிரச்சினையாக்க நேரிடும்; இதன் மூலம் தார்மீக முகமூடி கிழித்தெறியப்பட்டு இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற இனப்பாரபட்ச கொடுமை உலக [illegible] என்று எச்சரிக்கவும் விரும்புகிறோம்.

# 'பிரதேச சுயாட்சி' என்பது சுய நிர்ணய உரிமையாகாது!

## கம்யூனிஸ்ட் தீர்மானம் பற்றி அமிர்!

"ஒற்றையாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சி என்பது ஒருபோதும் சுயநிர்ணய உரிமையாக முடியாது. சுயநிர்ணய உரிமையென்பது தாம் விரும்பிய ஆட்சிமுறை எது என்பதை சம்பந்தப்பட்ட மக்களே தீர்மானித்துக் கொள்வதேயாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி தமிழினத்தை ஒரு தனித் தேசிய இனம் என்று ஒப்புக்கொள்ளுமாயின் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமை தமிழ் தேசிய இனத்துக்கு உண்டு என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கத் தவறிவிட்டதிலிருந்து. சிங்கள தீவிர வாதிகளின் பிடிக்குள்ளிருந்து அக்கட்சியினர் தம்மை இன்னும் முற்ருக விடுவித்துக் கொள்ளவில்லையென்பது தெரிகிறது."

—இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்ட தமிழர்விடுதலைக் கூட்டணி செயலதிபரும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு அண்மையில் நடைபெற்றபோது,ஒற்றையாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சியையே கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பதாகவும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் ஈழம் பிரிந்து செல்வதை எதிர்ப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது தெரிந்ததே;

இதுபற்றி திரு: அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது!

"ஒற்றையாட்சியை தமிழ் மக்கள் என்றே நிராகரித்து விட்டார்கள். ஒற்றையாட்சியின் கீழ் பிரதேச சுயாட்சி ஒருபோதும் சுயநிர்ணய உரிமை ஆகமாட்டாது. தனது தலைவிதியை—தனக்கு வேண்டிய ஆட்சியமைப்பை-ஒருதேசிய இனம் சுதந்திரமாக எவ்வகையான வெளியார் தலையீடுமின்றித் தீர்மானிப்பதே சுயநிர்ணய உரிமை எனும் அரசியல் தத்துவமாகும். இந்தத் தத்துவத்தை அங்கீகரிக்க கம்யூனிஸ்ட் கட்சி தவறிவிட்டது.

1944ம் ஆண்டு தமிழ் மக்கள் ஒரு தனித்தேசிய இனம் என்பதையும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் விரும்பினல் பிரிந்துசென்று தனியாட்சி அமைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டென்பதையும் 1944ம் ஆண்டு ஏற்றுக்கொண்ட கம்யூனிஸ்ட்கட்சி, இன்று இந்தப் பிரச்சினையில் நழுவி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை முழுமையாக ஏற்க தயங்குகிறதென்ருல், தீவிர சிங்கள இனவாதப் பிடியிலிருந்து அது இன்னும் முற்ருக விடுபடவில்லையென்பதுதான் அர்த்தமாகும்."

# இருவர் கண்ட கனவும் இறைவன் காட்டிய கருணையும்!

நாம் யார் மீது உண்மையான பற்றும் பாசமும் வைத்திருக்கிறோமோ அவர்களுக்கு ஏதாவது தீமை ஏற்படப்போவதாக இருந்தால், ஏதோ ஒரு வகையில் முன் கூட்டியே கனவில் எமக்கு அது தெரிந்து விடும் என்று கூறுவார்கள்.

கனவில் எனக்கு அதிகம்நம்பிக்கை ஏற்படுவதில்லை!—நாம் காணும் 'தமிழ் ஈழம்' என்ற ஒரேயொரு இலட்சியக்கனவைத் தவிர!

எனினும், சிலநாட்களுக்கு முன்பு நான் கண்ட ஒருகனவு என்னை மிகவும் கலவரத்தில் ஆழ்த்திவிட்டது!

மிகவும் கெட்ட கனவு அது. 'தமிழ் சமுதாயத்தின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைச் சுற்றிப்படர்ந்த தீய கனவு அது!

அது பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை—சொல்லி மற்றவர்களையும் மனக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவும் இல்லை!

என்மனைவியிடம் மட்டுமே சொல்லியிருந்தேன்!

நான் அப்படியொரு கனவைக் கண்டபின்னர், மன்னரிலிருந்து எனக்கொரு கடிதம் வந்தது.

தமிழரசுக் கட்சியின் மிகப்பழைய ஆதரவாளரான டானியல் ரேச் மாஸ்டர் அதை எழுதியிருந்தார்.

அவரும் தாம் கண்ட தீயகனவொன்றைப் பற்றி அக்கடிதத்தில் எனக்கு எழுதியிருந்தார்.

ஏறத்தாழ நான் கனவு கண்ட காலத்திலேயே அவரும் மன்னரில் அக்கனவைக் கண்டிருக்கிருர்!

அதுவும் திரு. அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றிய ஒரு கெட்ட கனவு!

கடவுளே! என்ன இது? இருவருக்கும் ஒரே மாதிரி, ஒரே மனிதரைப்பற்றி கெட்டகனவு தோற்றியிருக்கிறதே—தமிழினத்தின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதுவும் ஆகக்கூடாது; எந்தத் தீமையும் நேர்ந்து விடக்கூடாது என்று மௌனமாக இறைவனிடம் வேண்டிக்கொண்டேன்!

திரு. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும் அவர்களது மகன் ரவியும் மன்னர் சென்று விட்டு திரும்பிய நேரத்தில் 22-3-78 புதன் இரவு எதிர்பாராது ஏற்பட்ட பயங்கர கார் விபத்திலிருந்து அதிசயமாகத்தப்பிய செய்தியறிந்து இறைவனை நோக்கி கைகூப்பித் தொழுதேன்.

அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கு இப்படியொரு பயங்கர விபத்து—தத்து—ஏற்படப் போவதைத்தான் எனக்கும் மன்னர் ரேச் மாஸ்டருக்கும் கனவு மூலம் முன்கூட்டியே இறைவன் அறிவித்தான் போலும்!

எனினும்—

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது!

மிகப்பெரிய விபத்திலிருந்து — தத்திலிருந்து—தமிழர் தலைவன் காப்பாற்றப் பட்டு விட்டார்! அவரது குடும்பமும் காப்பாற்றப்பட்டுவிட்டது!

திரு. அமிர்தலிங்கத்தின் காலத்தில் தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்பது இறைவனின் சித்தமாக இருக்கும் போது, அமிரை ஆண்டவன் பாதுகாக்காமல் விடுவானு?

—கோவை

## செல்வா நினைவாக நாதஸ்வர இசை!

தந்தை செல்வாவின் 80 ஆவது அகவையை சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு தமிழ் ஈழம் அடங்கவுமுள்ள சிறப்பாக யாழ் நகரிலுள்ள வர்த்தக தாபனங்கள், திரைப்படமாளிகைகள் எதிர்வரும் 31-3-78ம் திகதி வெள்ளிக்கிழமை முழு நாளும் நாதஸ்வரம் புல்லாங்குழல், தான வாத்திய இசையையும் பக்திப் பாடல்களையுமே ஒலி பெருக்கியில் இசைக்கவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வகுப்புக்களை நடத்தி இயக்கத்தை தீவிரப்படுத்துக!

## தமிழா விடுதலைக்கூட்டணி கொழும்புக்கிளை அறைகூவல்!

தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை உணர்ச்சி அளவில் மட்டும் வளர்க்காது, தமிழினத்தின் பழைய வரலாறு தமிழ் ஈழத்தின் முக்கியத்துவம், அதை அடைவதற்கான வழிவகைகள், வேறு நாட்டு விடுதலை இயக்கங்களின் வரலாறு முதலியவற்றை விளககி அரசியல் வகுப்புக்களை நடத்தி இயக்கத்தை தீவிரப்படுத்தவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளையின் ஆண்டுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மேற்படி கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 1.4.78 சனிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் நடைபெறும்பொழுது அதில் பின் வரும் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

### மாதம் ஒரு ரூபா

சராசரி ஒரு குடும்பத்தில் எழுவர் எனக்கொண்டு இலங்கையிலுள்ள ஏறத்தாழ ஐந்து இலட்சம் தமிழ்க்குடும்பங்களில், ஆகக்கூடிய கணக்காக மூன்று இலட்சம் குடும்பங்கள் இயக்கத்துக்காக மாதாமாதம் ஒரு ரூபாவைத்தானும் நல்க முடியாதளவு வறுமையில் உள்ளன என்றோ, இன்றேல் மாறுபட்ட கொள்கை உடையன என்றோ கொண்டாலும் மிகுதியாய் யுள்ள இரண்டு இலட்சம் குடும்பங்களிடமிருந்து மாதாமாதம் ஒரு ரூபாவைப் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிதி நிலைமையை முன்னேற்றவேண்டுமெனவும், தேவையேற்படும் பொழுது தனிப்பட்ட சிலரிடம் பணத்தைப்பெற்று அத் தேவையை நிறைவுசெய்யும் வழக்கத்தை மாற்றவேண்டுமெனவும் இக்கிளைவலியுறுத்துகின்றது.

### இயக்க வேலைக்கு மூன்று நாட்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழுஉறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு கிழமையில் ஒருநாளையாவது இயக்க வேலைகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமெனவும், தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்றுநாட்களையாவது இயக்கவேலைகளுக்காகப் பயன்படுத்த வேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

### அரசியல் வகுப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்துக்கும், கிளைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழர்விடுதலைக்கூட்டணி அதன் அமைப்பு வேலைகளில் அதிதீவிரமாக ஈடுபடுவதோடு, உணர்ச்சியை மட்டும்வளர்க்காது தமிழினத்தின் பழைய வரலாறு தமிழீழத்தின் முக்கியத்துவம், அதை அடைவதற்கான வழிவகைகள், வேறு நாட்டு விடுதலை இயக்கங்களின் வரலாறு முதலியவற்றை விளக்கி அரசியல் வகுப்புக்களை நடத்தவேண்டுமெனவும் இக்கிளைவலியுறுத்துறது.

### கட்டுப்பாடு

தமிழர்விடுதலைக்கூட்டணி தனக்கென ஒரு யாப்பினை உருவாக்கி அதற்குஅமையச் செயற்பட வேண்டுமென 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற வட்டுக்கோட்டை மாநாட்டுத்தீர்மானம்ஒன்றை அனுப்பியிருந்தோமெனினும இந்நாள்வரை தமிழர் விடுதலைக்கூட்டணி ஒருயாப்பினைக் கொண்டு இயங்காமையை மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் உடனடியாக ஒரு யாப்பினை உருவாக்கி அதன்படி ஒழுக வேண்டுமெனவும் அதற்கு மாறுகச் செயல்படுபவர் யாராக இருப்பினும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்இக்கிளை வலியுறுத்துகிறது.

தமிழர்விடுதலைக்கூட்டணி செயலகத்தில் தினமும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தானும் வருகை தந்து மக்களின் பொதுத்தொல்லைகளை அறிந்து அவற்றுக்கு ஆவன செய்ய வேண்டுமென இக்கிளை வலியுறுத்துகிறது.

தொழிலுயர்வு, இடமாற்றம் போன்ற சிக்கல்களை தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் எவரும்; பாராளுமன்றஉறுப்பினர் என்றமுறையில்தலையிடக்கூடாது என இக்கிளை முடிவு செய்துள்ளது.

### பொருள் வளம்

தமிழீழத்தில் மூலப்பொருட்களைக்கொண்டு சிறுசிறு கைத்தொழில்களை ஆங்காங்கே தொடங்கவும், கடற்றெழில், வேளாண்மை ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில்விருத்திசெய்யவும், தக்கநடவடிக்கைகளை அரசினது துணைகொண்டோ இன்றேல் தனியாரின் துணைகொண்டோ எடுத்தல்வேண்டும்.

தமிழீழம் முழுவதும் வறண்ட எல்லைப்பரப்பாகையால்மழைநீர்கடலினுட்செல்லவிடாது தடுக்கப்பட்டுச் சேகரிக்கப்படவேண்டுமெனவும், இதற்காகத் தமிழீழத்திலுள்ள தூர்ந்துபோன குளங்கள் யாவற்றையும் மறுசீரமைப்புச் செய்யவும் வேறும் தகுந்த நடவடிக்கைகளை ஆராய்ந்து ஆவனசெய்யவும் வேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

### நன்னீர்பிரச்சினை

பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் துறையில் மக்களுக்கு அறிவியல் அடிப்படையிலான விளக்கத்தைக் கொடுத்து அவ்வப் பயிர்களுக்குத் தேவையான நீரை மட்டும் பாய்ச்சுமாறும் நீர் விணுக்குதலை தடுக்குமாறும் விளக்கம் செய்யதமிழர்விடுதலைக் கூட்டணி ஒரு துணைக்குழுவைத் தெரிந்து செயற்படுதல் வேண்டுமெனவும், இதில் கவனம் செலுத்தப்படாது விட்டால் பொதுவாகத் தமிழீழம் முழுவதும் சிறப்பாக யாழ்க் குடாநாடு மன்னர் ஆகிய எல்லைப்பரப்புகளில் குடிப்பதற்குத்தானும் நன்னீர் பெறமுடியாத ஒரு நிலை தோன்றுமாகையால் இதில் உடனடிக்கவனம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

### கலை கலாசாரம்

தமிழர்களின் தனிக்கலைகளான கும்மி, கோலாட்டம், வசந்தன், நாட்டுப்பாடல் போன்றவை அருகிவருகின்ற நிலை இன்னும் சில காலத்துக்கு நீடிக்குமாளுல் தமிழீழம் உருவாகும் பொழுது இக் கலைகளைக்கற்றுக் கொள்ள ஏட்டைப்புரட்டித்தானும் புரிந்து கொள்ள முடியாது போய்விடுமாகையால் இப்பொழுதுதே இக் கலைகள் மக்களிடையே பரப்பப்பட வேண்டுமெனவும் இதற்கு உதவியாக ஊர்கள் தோறுமுள்ள இளைஞர்மன்றுகள், கிராமவளர்முகமன்றுகள், ஊராட்சி மன்றுகள் போன்றவற்றின் துணையை நாடலாமெனவும் இக்கிளை வலியுறுத்துகிறது.

### தனித் தமிழ்

ஆளவந்தோரில் கெடுபிடியின் காரணத்தினுல் ஆங்கிலத்தைத் தவிர்ப்பது இன்று நடைமுறையிலிருக்கின்றதெனினும் தெரிந்தோ தெரியாமலோ வட மொழியை எல்லைமீறிக் கையாளும்வழக்கம்இன்னும் நம்மவரிடையே உள்ளமையாலும், ஆங்கிலம் வெளிக்காயம் போன்றதும் வடமொழி உள்ளிருந்தே அரித்து உயிரைக் குடிக்கும் புற்றுநோய் போன்றதுமாகையால் வடமொழிச்சொற்களைத் தவிர்த்து தூயதமிழ்ச் சொற்களை கையாளும் வண்ணம் மக்களிடையே கொள்கை விளக்கம் செய்ய வேண்டும்.

---

## "செல்வா ஒரு தீர்க்கதரிசி என்பதில் இருவித கருத்துக்கு இடமில்லை!"

### கருத்தரங்கில் கரவையூர் செல்வம் கருத்துரை!

"நான் ஒருகட்சி அரசியல் வாதியல்ல, எந்தத்தமிழ் கட்சியையும் சேர்ந்தவனல்ல. எனினும் கிறித்தவன் என்ற மட்டில், கிறித்துவின்வழியில் ஒரு இனம் அழிக்கப்படும்போது அதைத்தவிர்ப்பதற்காக அதன் மீட்புக்காக குரலெழுப்பவேண்டியதும் என் கடனே."

25-3-78 'சனிக்கிழமை யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கின்போது' செல்வா ஒரு தீர்க்கதரிசி, எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய கரவையூர்ச் செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

"தொடர்ந்து அவர் தன் உரையில் கூறியதாவது:-

தீர்க்கதரிசி எனும்சொல் கிறித்தவர்களுக்கு உரியது. அச்சொல்லை ஆராய்ந்து பார்க்கும்போது அதன்படி தீர்க்கதரிசி என்பவன் காலத்துக்குத் தக்கவனுகத் தோன்றி அந்த இனத்தின் நாட்டின் மீட்சிக்கு வழிகாட்டுபவனுக, போராடுபவனுக இருக்கவேண்டும். அந்த வகையில் அமரர் செல்வநாயகமும் தமிழ் இனத்தின் தீர்க்கதரிசி என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது."

"ஒரு தீர்க்கதரிசிக்கு பரம்பரை பரம்பரையாக வாரிசுகள் இருக்கமுடியாது. வாரிசின் வழிவருபவனை தீர்க்கதரிசி என்று கூறவும் முடியாது. ஆனுல் ஒரு இனத்துக்கு விடுதலை வேண்டுமானுல் காலத்துக்குக்காலம் அவ்வினத்தில் தீர்க்கதரிசிகள் தோன்றி வழிகாட்ட வேண்டும். அதன்படி இப்பொழுது எம்மிடையே தீர்க்கதரிசிகள் உள்ளனரா என்ற கேள்வியை கேட்டுப் பார்க்கவேண்டியவர்களாக உள்ளோம்."

"நான் எப்பொழுதும் என்னை ஒரு விமர்சகன் எனும் நிலையில் வைத்தே கருத்துகளை வெளியிடுகின்றேன். எம்மை நாம் எப்பொழுதும் சுயவிமர்சனம் செய்து கொள்ளவேண்டும். அத்தகைய விமர்சனங்களே எம்மை திட்டமிட்டு செயல்பட வழி வகுக்கும்.

"எமக்கு விடுதலை உணர்வை ஊட்டியவர்கள் தமிழர்களை விட சிங்களவர்களே. அவர்கள் காலத்துக்குக்காலம் எம்மவர்களுக்கு கொடுக்கின்ற அடிகள் தாம் எம்மவரை விழிப்படைய வைத்து விடுதலை உணர்வுக்கு வித்திட்டு வருகின்றது, எனவே எமது விடுதலை இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் தமிழர்களுக்கு சிங்களவர்கள் அடித்துக்கொண்டே இருக்கவேண்டியுள்ளது"



கத்தோலிக்க துறவிகளின் இத்தகைய பேச்சுகளையிட்டு யாரும் எம்மை புரட்சித் துறவிகள் என்று எண்ண வேண்டியதில்லை. இவை, யெல்லாம் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் பின்னர் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளும், கடமைகளும் இவை இத்தனை காலமும் எழுத்து வடிவில் இருந்தது. அக்கருத்துகளை நாம் இன்று மக்கள் முன்பு வைக்கின்றோம். அவற்றை புதிதாக கேட்பவர்களுக்கு புரட்சிபோல் தோன்றுகிறது." என்றார்.

கருத்தரங்கிற்கு யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமைதாங்கினுர், கருத்தரங்கில் சேர். பொன். இராமநாதன் அவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ள நூலுடன் அந் நூல் ஆசிரியர் திரு. எம். வைத்தியலிங்கம் அவர்களும் திரு. ஈழவேந்த [illegible] கப்பட்டார்.

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கொடுக்கும் ஆதரவாகும்

மில்க்வைற்_யாழ்ப்பாணம்

கலைஞர். மு. கருணுநிதி
பாவாணர் பெருஞ்சித்திரனர்
சொற்பொழிவு ஒலிப்பதிவு நாடாக்கள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதல் மாநாட்டின் பேராளர்களை வரவேற்று கலைஞர், பாவணர் இருவரும் ஆற்றிய உணர்ச்சி மிகு சொற்பொழிவுகளின் ஒலிப்பதிவு நாடாக்கள் விற்பனைக்குண்டு. இதனுல் பெறப்படும் நிதி "உலகத் தமிழர் குரல்" வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படும்.

தொடர்பு கொள்க:
இரா. கனகரத்தினம், பொதுச்செயலாளர்.
உ.த.ப இயக்கம், 128/8, Chetty Garden,
Mulgampola, Kandy, Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தொடக்ககாலத்தை விளக்கும் அருங்களஞ்சியம்!

## காலத்தால் மறையாது ஞாலத்தில் நிலைத்துநிற்கும் வைத்திலிங்கம் எழுதிய இராமநாதன் வரலாறு!

### இன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியீட்டு விழா!

ஈழம்வாழ் தமிழினம் பெருமைப்படத்தக்க பல அரசியற் தலைவர்களைத்தோற்றுவித்துள்ளது. இவர்களுள் இருவர் தம் வாழ்நாளில் எடுத்துக்காட்டிய தீர்க்கதரிசன உணர்வினால் நம் மக்கள் நெஞ்சில் நீங்கா இடத்தினைப் பெற்றுள்ளதோடு மாற்றாரும் மதித்துப் போற்றும் பெருநிலை எய்தியுள்ளனர்· இவர்களுள் முன்னையவர் சேர் பொன் இராமநாதனாகவும் பின்னையவர் சா.ஜே.வே. செல்வநாயகமாகவும் விளங்குகின்றனர். சேர் பொன். இராமநாதன் அவர்கள் இலங்கை அரசியலில் அரை நூற்றுண்டுக்கு மேல் தனியாட்சி செலுத்திய பெருமகனாக விளங்கினார். செல்வநாயகம் அவர்கள் அரசியலில் முப்பது ஆண்டுகளாக ஆட்சி செலுத்தி நிறைவாழ்வு எய்திய நிலையில் தனது வாழ்வை முடித்துக் கொண்டார். இருவரும் ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் நிறைவெய்திய காலகட்டத்தில் உயிர் நீத்துள்ளனர்.

சேர்; பொன். இராமநாதனுடைய வாழ்வு அனைத்திலங்கை அடிப்படையில் புகழோங்கி நின்று தன்வாழ்வின் இறுதிப்பகுதியில் சிங்கள அரசியல் வாதிகளின் மனப்போக்கினால்வெறுப்புக் கொண்டு தமிழரின் தனித்துவம் பேண உறுதி பூண்டு தன் இறுதி மூச்சுவரை தமிழர் சார்புக் குரல் எழுப்பி உயிர்துறந்த 'காட்சியினைக் காண்கிறோம். தந்தைசெல்வநாயம் அவர்களோ அரசியலில் காலடி எடுத்து வைத்ததற்கு தமிழரின் தாழ்ந்த நிலையே அடிப்படைக்காரணமாக விளங்கியது. இவ்விரு பெருமக்களின் வாழ்க்கை வரலாறு வரையப்படின் தமிழன் தன் வரலாற்றை அறிவதற்குத் துணை நிற்பது உறுதி. காரணம் தமிழர் வாழ்வோடு பின்னிப்பிணைந்த வரலாருகவே இவர்களுடைய வாழ்க்கைவரலாறு விளங்குகிறது.

## இராமநாதன் வரலாறு

இவ்விரு பெருமக்களுள் சேர். பொன் இராமநாதனுடைய வரலாற்றினை சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. மு. வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ளார். சேர். பொன். இராமநாதனுடைய வரலாற்றின் தொகுதி I 1971ல் ஏறக்குறைய 650 பக்கங்களுடன்வெளிவந்தது. இலங்கையில் எந்த ஒரு தலைவரைப்பற்றியும் இத்தகைய ஒரு பெரு நூல் வெளிவராத சூழ்நிலையில் இந் நூல் வெளிவந்தது சிங்களவர் பலரை வியப்பில் ஆழ்த்தியதோடு தமிழர் பலரைப் பெருமிதம் கொள்ளவும் செய்தது.

## டட்லி பாராட்டு

ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் எவ்விதம் வரையப்படவேண்டும் என்ற வரைவிலக்கணத்திற்கு ஏற்ப வரையப்பட்டுள்ள இந்நூல் இலங்கையின் மறைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. டட்லி. சேனநாயக்கா அவர்களை பின்வருமாறு எழுதத் தூண்டியது. "It is extremely regrettable that there isn't A Vythilingam among the Sinhalese to commemorate the great Sinhalese leaders" (இதனின் தமிழாக்கம் பின்வருமாறு அமைகிறது. பெரும் சிங்களத் தலைவர்களின் சிறப்பினை எடுத்துக்கூற வைத்திலிங்கம் போன்ற சிங்களவர் எம்மிடையே இல்லாதது மிகவும்வருந்தத்தக்கது) இவ்விதம் டட்லி சேனநாயக்கா அவர்கள் வாய்விட்டுப் புலம்பும் அளவிற்கு வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ள சேர். பொன். இராமநாதன் பற்றிய வரலாற்று நூலின் தொகுதி I அமைந்துள்ளது.

## இரண்டாவது பகுதி

ஏறக்குறைய ஏழாண்டு இடைவெளிக்குப்பின் பல இன்னல்கள் தொல்லைகள் எல்லை மீறிய பொருளாதார நெருக்கடிகள் அனைத்தையும்தாண்டி ஏறக்குறைய 760 பக்கங்களுடன் சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றின்தொகுதி IIஐ திரு. வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ளார்.

ஒரு பெரு மனிதனைப் பற்றி வரையப்படும் நூல் அப்பெருமனிதன் வாழ்வுக்கேற்ப விழுமிய நடையில் அமைந்திருக்க வேண்டியது அவசியம். இதனை ஆங்கிலத் "The diction must match the subject matter' பொருளுக்கு ஏற்ற முறையில் கையாளப்படும் உரை நடையும் விழுமியநடையில் அமையவேண்டும். இதற்கேற்ப திரு. வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ள நூலும் ஒரு பெருமனிதனைப் பற்றி ஒரு பெரு மனிதனால் வரையப்பட்ட ஒரு பெரு நூலாக அமைகிறது. இதனை திரு. ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் "A superlative work on a superlative subject" ஒரு பெரும் பொருள் பற்றி கூறப்பட்டபெருநூல் என்று இந்நூல் பற்றி மொழிந்த மொழிகள் சாலவும் பொருத்தமுடைய கூற்றேயாகும்.

சேர். பொன். இராமநாதனின் முன்னோர் அவரின் தோற்றம், அவர்1910ஆண்டு வரை ஆற்றிய பல்துறைப் பணியினை பாங்குடன் விளக்கும் முறையில் திரு. வைத்திலிங்கம் அவர்களின் முதற் தொகுதிநூல் அமைந்திருக்க அவரின் இரண்டாவது தொகுதி 1911ற்கும் அவர் மறையும் வரையான 1930ம் ஆண்டுவரை பல நெருக்கடிகளுக்கிடையில் பல எதிர்ப்புக்களைத் தாங்கிக் கொண்டு அவர் ஆற்றிய வீரம் மிக்க பணியினை எம் மெய் சிலிர்க்கும் வகையில் வரைந்துள்ளார்.



## சிந்தனையைத் தூண்டும் நூல்

1904ம் ஆண்டு செப்தெம்பர் 3ந் திகதி "If Sinhalese lips will not speak the Sinhala language who else is there to speak it" (சிங்கள நாக்குகள் சிங்களத்தைப் பேசாவிடின் யார் சிங்களத்தைப் பேசுவது) என்றுசிங்கள மக்களின் இன உணர்வினை—மொழி உணர்வினைத்தட்டிஎழுப்பிய இராமநாதன் அவர்கள் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கழித்து 1915ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின்போது சிங்கள மக்கள் சிந்தை நிறைவோடு வாழ்த்தும் முறையில் அவர்களுக்காக தன் உயிரையே துச்சமென மதித்துப் பணியாற்றிய இராமநாதன் அவர்கள் 1920ல் சிங்கள [illegible] தெரிவித்ததோடு இலங்கையில் பல்கலைக்கழகம்தோற்றுவிப்பதை யொட்டி தெரிவித்த கருத்துகளும், இலங்கைத் தேசிய காங்கிரஸ் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து பற்றியும், இன அடிப்படையில் பிரதிநிதித்துவம்தெரிவுசெய்யாததற்கு பதிலாக மாகாண அடிப்படையில் பிரதிநிதித்துவம் தெரிவுசெய்யப்படும் போது தமிழ் மக்களுக்கு அதனுல் ஏற்படும் விளைவுகள் பற்றியும் தமிழ் மக்களுக்குப் போதிய அரசியல் பாதுகாப்பு வழங்காதநிலையில் பொது மக்கள் வாக்கெடுப்பு என்பது காலப் போக்கில் சிங்களஏகாதிபத்தியத்திற்கு வழிகோலும் என்று கூறி "டொனமூர் எனில் இனி மேல் தமிழர் இல்லை" "Donoughmore means Tamils no more" என்று முழங்கி தமிழருக்கு வரப்போகும் பேராபத்துக்களை முன்கூட்டிய உணர்வோடு அன்றே இராமநாதன் எடுத்துக்காட்டிய கசப்பான உண்மைகளையெல்லாம் எம் கண்கள் கலங்கும்படி திரு. வைத்திலிங்கம் இராமநாதனுடைய வரலாற்றினை வரைந்து இன்றைய எம் சூழ்நிலையை நினைவுபடுத்தி அறிவுறுத்திச் செல்லும் பாங்கு உண்மையில் எம் சிந்தனையைப் பெருமளவு தூண்டும் முறையில் அமைந்துள்ளது.

## வரலாற்று உணர்வு

வரலாறு என்ற பெயரில் கட்டுக் கதைகள் உருவாகி வருவதோடு ஆளும் இனத்திற்கு அடிவருடிகளாக மாறி ஆம் ஓதும் நிலையில் கருத்துக்கள் தெரிவிக்கப்படும் இச் சூழ்நிலையில் திரு. வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ள இந்நூல் எம் அறிவுக் கண்ணைத் திறப்பதோடு இன்று எமக்கு மிக மிகத் தேவையானவரலாற்றுஉணர்வினையும் ஊட்டுகின்றது. வரலாறு மறந்த இனத்திற்கு வாழ்வு இல்லை என்பதனை நன்கு உணர்ந்துள்ள வைத்திலிங்கம் அவர்கள் சேர், பொன். இராமநாதனின் வரலாற்றூடாக தமிழினத்தின் அரைநூற்றுண்டு வரலாற்றினை அதன் ஏற்றத் தாழ்வினை அதன் வாழ்வை—வீழ்ச்சியைப் படம் பிடித்துக்காட்டும் முறை என்றும் எம் நெஞ்சில் நன்றியுணர்வோடு போற்றத்தக்க பணியாக விளங்குகின்றது.

ஈழவேந்தன்

## வெளியீட்டுவிழா

இப் பெருநூலின் வெளியீட்டுப் பெருவிழா எதிர் வரும் 2-4-78ல்யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நூலின் விலை ரூபா 40 என அறிகிறோம். ஆனல் நூலினை நுகர்வோர் ரூபா 400ஐ வழங்க முன்வருவது உறுதி காரணம் ஒரு வாழ்க்கை வரலாற்றின் சிறப்பியல்புகள் அனைத்தின் உறைவிடமாக இந்நூல் விளங்குகின்றது.

மேற்குறித்த நூலினை வரைந்த வைத்திலிங்கம் அவர்களே சேர், பொன். இராமநாதன் மறைந்த காலந்தொட்டு தந்தை செல்வா மறைந்த காலப் பிரிவினை உள்ளடக்கி ஒரு பெருநூலை வெளிக்கொண்டு வரவேண்டுமென்பது தமிழர்களின் விடுதலறியாவிருப்பமாகும்.


நண்பர்கள் தேவையா



அனைத்துலக கலாசார நட்புறவு விபரங்களுக்கு தபாற்செலவுடன் விண்ணப்பியுங்கள், "சந்திரோதயம்," சர்வதேச பேனு நண்பர்கள் தலைவர், 265/8, சேர்ப்பன்டைன் பாதை, பொரளை. கொழும்பு—8.



இப்பொழுது விற்பனையாகிறது!

மெழுகுவர்த்தி

அமரர் டாக்டர் நாகநாதனின் வாழ்க்கை வரலாறு

நூலாசிரியர்: கரிகாலன்

சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யின் மதிப்புரையுடன்

கிடைக்குமிடம்:- சுதந்திரன் அலுவகம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புறநானூற்றுப் பொற்சிந்தனைக்கு இலக்கியமாக திகழ்ந்த புனித தலைவர்

## பகைவரும் புகழ்ந்த செல்வாவின் ஆண்மை!

புறநானூறு தமிழிலே உள்ள இனிய, அரிய, பெரிய புத்தகம் அதை விடக்கற்பனை அழகு கொழிக்கப்பாடப்பட்ட பாடல்கள் தமிழிலே உண்டு; அதன் பிழிவையே வேறு சில சிந்தனைகளோடு கலந்து செறிவுறத் தருகின்ற குறளும் தமிழிலே உண்டு; அதை விட மிகப் பலவான பாடல்களைக்கொண்ட எத்தனையோ பெரிய புத்தகங்கள் தமிழிலே உண்டு. ஆனாலும், புறநானூறே தமிழின் இனிய பெரிய புத்தகமாக விளங்குகிறது, இதற்குக் காரணம், அதிலே சொல்லப்படும் செய்திகளும் கருத்துக்களும், பல சமயங்களில் நம்மையே மெய்சிலிர்க்க வைத்துவிடுகின்றன; அந்தச் சிலிர்ப்பு, ஆழ ஆழப்பதிந்தும், அகல அகல விரிந்தும், உயர உயர நிமிர்ந்தும்,— நமது நெஞ்சப் பரப்பையும் அதன் கூர்மையையுமே புலமைப்படுத்தி விடுகிறது.

வீரர்களின் ஆண்மையைப் பாராட்டுவதில் எத்தனையோ வகைகளைக் கண்டறிந்துள்ளது புறநானூறு. அத்தனைக்கும் கொடுமுடியாக, — ஒருவனைப் பாராட்டும் போது, 'பகைவர் புகழ்ந்த ஆண்மை' உடையவன் என்னும் ஒரு புதிய குரலை அது (373) மிழற்றுகிறது.

ஒருவன் தன்னுடைய நெஞ்சத் திண்மையாலும், உடல் வலிமையாலும், படைபட்டாளப் பெருக்கத்தாலும் மற்றவர்களை அடித்து அடக்கலாம்; அவர்களை வெற்றி கொண்டும் உயரலாம். ஆனாலும், அவனால் வெல்லப்பட்ட பகைவர்கள், அவனுடைய வெற்றியை ஒப்புக்கொள்ளுவார்களே தவிர, அவனை மனம் உவந்து புகழமாட்டார்கள். எளிதிலே கிடைக்க முடியாத வெற்றியாகிய இந்த வெற்றியை, — பகைவராலும் உவந்து பாராட்டப்படும் உயர்வைப் பெறுவதுதான் ஒருவீரனுடைய ஆண்மைக்கு அழகுஎன்கிறது புறநானூறு.

இந்தப் பேராண்மையைப் பெற்றவர்கள் அண்மைக் காலத்தில் மிகச் சிலரே. காந்தி அடிகள், பெரியார் ஈ. வெ. ரா., திரு. வி. க., அறிஞர் அண்ணா முதலான சிலப்பேரே இந்த ஆண்மையைப் பெற்று விளங்கினார்கள். இவர்களின் கொள்கைகளை ஏற்காதவர்கள் கூட — இவர்களின் பண்பாட்டை உவந்து பாராட்டினார்கள். இந்தப் பெருமக்களின் வரிசையிலே இடம் பெறுகிறார் தலைவர் செல்வா அவர்கள்...

### அள்ளித் தழுவி

ஈழத்துத் தமிழர் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் அரசியல் வரலாற்றைத் தமிழர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. இருந்தஇடத்தை விட்டு விலகித் தமிழரசுக் கட்சி தொடங்கியது முதல், அனைத்துத் தமிழ்த் தலைவர்களையும் ஒன்று திரட்டித் த.வி.கூட்டணியை உருவாக்கியது வரை. — பல்வேறு மேடுபள்ளங்களைக் கொண்டதாக இயங்கிய அவருடைய அரசியல் ஒரு திறந்த புத்தகம்.

தம்மை வெறுத்தவர்களும் எதிர்த்தவர்களும் தம்மை வந்து அடையும் அளவில் வளர்ந்து உயர்ந்து விட்ட பிறகும்!—எவர் ஒருவரையும் அவர் புறக்கணித்தார் என்றோ, இகழ்ந்தார் என்றோ நாம் கேள்விப்பட்டதே இல்லை. இரண்டு தொகுதியில் வெற்றி கிடைத்து விட்டால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துத்தமிழ் அதிகாரிகள் போல் தலைகனத்துச் செருக்கித் திரிவதும், — இரண்டு இடங்களில் தோல்வி கண்டு விட்டால் வாலைக்குழைத்துக் கொண்டுவேண்டாதவர்களையும் தேடி நத்தி, அவர்கள் பின்னால் திரிவதுமே பல அரசியல் தலைவர்களின் நடைமுறையாக உள்ளது. அப்படியான இடிபாட்டு நடை இந்த மனிதரிடம் என்றைக்குமே இருந்ததில்லை. இவரால் வென்று தள்ளப்பட்டவர்கள்,—இவருடைய செல்வாக்கைப் புறக்கணிக்க முடியாமல், இவருடனேயே வந்து சேர்ந்த போது எத்தனை ஆனந்தமாக அவர்களை அள்ளி அணைத்துக்கொண்டார் இந்த மனிதர். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?" என்பதற்கு இலக்கியமாக அமைந்த அந்தச் சந்திப்பு, சண்டைக்காரர்கள் சம்பிரதாயமாகக் கை குலுக்குவது போலவா இருந்தது...!

### பயிற்சிப் பட்டறை

மட்டுமோ? ஈழத்தமிழகத்தில் உள்ள இடதுசாரி இயக்கங்களுக்கெல்லாம் ஒரு பயிற்சிப் பட்டறையாகவும் அவர்கள் அரசியல் பார்வைக்குக் கூரேற்றியசிரான சாணையாகவும் கூட விளங்கினார் செல்வா அவர்கள்!

"ஓர் இனமக்களின் மொழி, கலை, பண்பாடு முதலியன பாதுகாக்கப்படவேண்டும் என்னும் மார்க்சியக் கருத்தைப் படித்திருந்தும்,— ஈழத்தமிழ் முற்போக்காளர்கள், ஏதோ காரணத்தால், அதை மறந்து. அரசியலில் ''ரஞ்சனக் கூத்தும் தந்தனப் பாட்டும்'' நடத்திக்கொண்டு இருந்தார்கள்; உண்மையின் மீது தியாகச் செங்கல்களால் அமைக்கப்பட்ட அவருடைய செல்வாக்கு மாளிகை உயர உயரத்தான் அவர்கள் படித்த மார்க்சியமே அவர்களுக்குப் புரியலாயிற்று.

செல்வா அவர்கள் இறந்து போன சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சிச் சார்புடைய ஓர் ஏடு பின்வருமாறு எழுதியது!

"தமிழ் மக்களினது மொழி, கலை, கலாசாரம், பிரதேசம், பண்பாடுகள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டியது அத்தியாவசியம். அதற்காக ஓர் அமைப்புத் தேவை. இதை முற்போக்கு இயக்கங்கள் வேறெந்தக் காலத்தையும் விட, இப்பொழுது துல்லியமாக உணர்ந்து, பேசி, நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. 'பிரதேச சுயாட்சி' என்ற அமைப்பின் மூலம் இவைகளைப் பாதுகாப்பதுடன் தமிழர்கள் தம்மைத் தாமே நிர்வகிக்கலாம் [illegible] பதைக் கம்யூனிஸ்ட் கட்சி பகிரங்கமாக இன்று ஒப்புக் கொண்டுள்ளது."

இவைகளைப் பற்றிப் பேசுவதே பிற்போக்குத்தனம் என்று சொல்லி வந்த கட்சி, பகிரங்கமாக இவைகளை ஒப்புக்கொண்டது என்றால்,- அசைக்க முடியாதபடி ஊன்றிவிட்ட செல்வநாயகத் தலைவரின் அரசியல் செல்வாக்கே காரணம்; அதே இதழ் எடுத்துக்காட்டியிருப்பது போல,— "அரசியல்வாதி என்கின்ற முறை

**முனைவர் சாலை இளந்திரையன்**

யிலும் தனிநபர் என்கின்ற ரீதியிலும் அவரது ஆத்ம நேர்மை, துணிவு வைராக்கியம் மிகப் பிரசித்தமான'' தாக இருந்ததே அந்தச் செல்வாக்குக்குக் காரணம். இந்தக் காரணங்களாலே தான், "அரசியல், அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்'' என்பதைப் பொய்யாக்கித் தமது சீரிய ஒழுக்கத்தாலும் நேர்மையான நடத்தையாலும் அப்பழுக்கற்ற பொதுத் தொண்டாலும் அதைப் புனிதமாக்கிக் காட்டியவர் நமது மண்ணில் உதித்த செல்வா அவர்கள்'' என்று அந்த இதழ் பெருமை சொல்லிக்கொள்ள முடிந்தது.

இப்படி அவரை மதிப்பிட்டுப் பாராட்டும் இதழ்,— அதே குறிப்பின் மற்றொரு பகுதியில், "எம்மைப் பொறுத்தவரை மறைந்த தலைவரது எல்லா அரசியல் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டவர்களல்ல; சிலவற்றை முற்றாக நிராகரிக்கிறோம்!'' என்று குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கது. அதாவது, அவருடைய கருத்துக்களில் சிலவற்றை ஏற்காத எதிரிகளும் அவருடைய பண்புக் கனிவினால் மகிழ்ச்சி பொங்குகிற அளவுக்கு அவருடைய ஆண்மை விளங்கியது.


### எளியதேயோ?

மேலோட்டமாகப் பார்த்தால், ஒரு தலைவராக வந்து விட்டால் இந்தப் பண்பாட்டை எளிதாகப் பெற்று விடலாம் என்று தோன்றும்; கட்சிக்காரர்கள் கன்னா பின்னா என்று எதிரிகளைத் தாக்குவார்கள்; தலைவர் எழுந்து, "இப்படி எல்லாம் பேசக் கூடாது'' என்று கண்டித்து விட்டாலே எதிரிகள் மதிப்பார்களே என்று தோன்றும். உண்மையில், இது அவ்வளவு எளிது அல்ல; ஏன், தறிகெட்டுத் திரியும் தங்கள் கட்சியின் சில முரட்டுத் தொண்டர்களைத் தட்டி [illegible] கும் எளிதாக இயலக் கூடிய காரியமில்லை!

இப்படிப்பட்ட ஒரு காட்டுத்தனமே அரசியலாக நடைபெறும் கிழக்கு நாடுகளில் பகைவர் புகழும் ஆண்மைப் பண்பை வளர்த்துக் கொள்ளுமுன், தலைவர்கள் எத்தனையோ இழிவுகளை ஏற்றாக வேண்டும்; ஆத்திரக்காரர்களான தொண்டர்களும் குட்டித்தலைவர்களும், தங்கள் மனம் போலச் செயல் நடைபெறாதபோது முணுமுணுப்பார்கள்; அந்தச் சமயத்தில் எதிரிகளிடம் தங்கள் தலைவர் பண்பும் பரிவும் காட்டினால், கையாலாகாத் தனம் என்பார்கள்; கோழைத்தனம் என்பார்கள்; தொண்டர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று கூட அடாப்பழி சுமத்துவார்கள்!

'நம்முடைய தொண்டர்கள் தானே,— சொல்லிவிட்டுப் போகட்டும்' என்று இருந்தால்,— எதிரிகள், "தொண்டர்களைத் தட்டி மடக்க வக்கில்லை,—இவர் ஒரு தலைவராம்!'' என்று எள்ளி நகையாடுவார்கள்; "எங்களைக் கண்டு பயந்து விட்டார்,—பாரீர் எம் செல்வாக்கை!'' என்று கோயபல்ஸ் குரல் எழுப்புவார்கள்.

"Uneasy lies the head that wears the crown'' என்று ஓர் ஆங்கிலச் சொல்லடை உண்டு. ஒரு கட்சியின் தலைவருடைய நிலையும் இதுவே. இப்படிப்பட்ட ஓர் இக்கட்டான தடத்தில் நடந்து கொண்டும், நிதானம் தவறாமை என்னும் உயர் பண்பை வளர்த்து வந்ததாலேயே செல்வா அவர்கள் பகைவரும் புகழ்ந்த ஆண்மையாளராக உயர முடிந்தது.



### நினைவில் வைக்க.

புறநானூற்றுப்பொற்சிந்தனைக்கு இலக்கியமாக விளங்கிய செல்வா போன்றவர்களையே நல்லறிஞர்கள், போற்றதக்க செல்வங்களாகக் கொள்வார்கள். காரணம், அத்தகையவர்களாலேதான், மக்களுக்குமனிதர்கள் மீது உள்ள நம்பிக்கை நீடிக்கமுடிகிறது. குறிப்பாக, வத்தல்களும் தொத்தல்களும் பம்பி நிறைந்து அயோக்கியத்தனத்துக்கே ஆலவட்டம் சுழற்றும் அரசியல்களத்தில் செல்வநாயகச் செல்வர்கள் தோன்றுவது மனிதக்குலம் பெற்ற நற்பேறு என்றே சொல்லவேண்டும்.

இந்த எண்ணங்களோடு தலைவர் செல்வா அவர்களின் நினைவை மீண்டும் ஒருமுறை புதுக்கி நமது நெஞ்சுக்குத் தெம்பு ஊட்டிக்கொள்வோம்...

## தமிழ் ஈழ தனிப்பெரும் தத்துவன்!

(ஆரையம்பதி ஆ. தங்கராசா)

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்படும் ஞானங்கள் எல்லாம்

சிந்தையே ஆக மனம் ஒரு மூச்சும்
திருந்து சாத்துவிகமே ஆக

நந்தமிழ் செல்வா கண்ட செந்தமிழ் ஈழநாட்டின்
இன்பமாம் தமிழ்ஈழ தனிப்பெரும் தத்துவத்தின்

அந்த மாம் இன்ப வெள்ளத்துள் திளைத்து
ஆனந்த சுதந்திரம் பாடுவோமே!

வாழை யடி வாழையென வாழும் தமிழர்களை
வந்தேறுச் சிங்களவர் வதைப்பதை மனங்கண்டு

மாழை மணி நெஞ்சத்தான் "தமிழரசு" தான் கண்டு
மாமதியாய் வலம்வந்தான் அவனுள்ளம்
என்றும் தங்கம்!

கோழையுல குயிர்த்துயரம் இனிப் பொறுக்கமாட்டேன்,
கொடிய இருள் என்றும் தமிழ் மண்ணில்
விடமாட்டேன்

தாளைக்கும் கடற்கரையுண்டு! கள்ளிக்கும் கடலையுண்டு!
தாயாம் தமிழுக்கு நிலமில்லை என்று நொந்தான்!

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்

நின்று நிலைக்குமென உணர்ந்த பேறிதனால்
என்றைக்கும் தமிழ்ஈழம் உடையேம்;

நன்றிஇல் நெறியில் அழுந்திய தலைவன்
நற்றமிழ் வேந்தன் செல்வ நாயகம்

வென்றி கொள் தமிழ்ஈழ ஒளியினில் வாழ்வான்
வந்தே மாதர ஒலியினில் திகழ்வான்.

வாடிய தமிழைக் கண்டபோ தெல்லாம்
வாடினான்; சிந்தை இளைத்தே

நாடினான், தமிழரின் நாட்டினைப் பறித்த
வெறியரைக் கண்டு உளம் பதைத்தான்

நீடிய உரிமை நோயால் வருந்திடும் தமிழர்கண்டு
நேர்மையாம் உளத்தான் துடித்தான்!

ஈடிலா மாணிக்கம் தமிழரின் பெருந்தலைவன்
இன்றில்லை; என்றாலும் இறக்கமாட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபு உன் நினைவாக...!

இராசலிங்கம் பார்த்திபன் (கோபு)



தோற்றம்:- 3.3.1975. மறைவு:- 17.3.1977

கோபு, நீ எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. அன்பு மகனே, உன் இனிய நினைவுகளோடு உந்தன் பாதாரவிந்தங்களில் அஞ்சலி செய்கிறோம்.

—உன் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, சுற்றம் அனைவரும்.


## பாவியுங்கள்




றோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

றோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் பேக்கிங்பவுடர்
றோயல் கஸ்டட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

## சிவா இண்டஸ்ரீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

## செல்லமகால்

(கொட்டாஞ்சேனை) 5-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் சீனிவாசன் மற்றும் பலர் நடித்த—

# ஊருக்கு உழைப்பவன்



## கெயிட்டி [கொட்டாஞ்சேனை] றீகல் [மட்டுநகர்]

கமலாலயம் மூவீஸ் அளிக்கும்

# வாடைக் காற்று

ஏ. ஈ. மனோகரன், சந்திரகலா, ஆனந்தராணி டொக்டர் இந்திரகுமார், கே. எஸ். பாலச்சந்திரன், கே.ஏ.ஜவாஹர், எஸ். யேசுரட்ணம், ஏ. பிரான்சிஸ், கே.கந்தசாமி மற்றும்பலர் நடித்த-

● தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களின் பாராட்டைப்பெற்ற திரைப்படம்.

## கிங்ஸ்லி

(கொழும்பு) 4-வது வாரம்

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த—

# ஜானகி சபதம்

3-வது வாரம்

## வெலிங்டன் (யாழ்நகர்) பிளாஸா (வெள்ளவத்தை)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

# கிரகப்பிரவேசம் (கலர்)

## கெப்பிட்டல் (கொழும்பு)

9வது வாரம்-

## விஜயா (மட்டுநகர்)

கே. ஆர். விஜயா — ஜெய்சங்கர் நடித்த-

# மேயர் மீனாட்சி

7-வது வாரம்

## லிடோ

(யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, சிவகுமார் பத்மபிரியா -நடித்த

# உறவு சொல்ல ஒருவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.